நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42 ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

C.C.No. 456/2022

<u>அ.த.சா: 2 (LW–2) சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தீன் இலாஹி | சாதி | : | |
| தந்தை பெயர் | : | பசீர் அஹமத் | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | 32 |

07–08–2024 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது

---

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்.)

<u>முதல் விசாரணை:</u>

நான் அன்னஞ்சி பள்ளிவாசல் தெருவில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 பைசில் ரஹ்மான் என்பவரை தெரியும். ஆஜர் எதிரி குமரேசன் என்பவரை தெரியும். கடந்த 22.12.2020 அன்று எங்கள் ஊரைச்சேர்ந்த சின்ன ராவுத்தர் என்பவர் இறந்துவிட்டார். அவரை அடக்கம் செய்வதற்காக மறுநாள் 23.12.2020 அன்று காலை 11.30 மணியளவில் எங்கள் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட அடக்கம் செய்யும் இடமான அன்னஞ்சி விலக்கில் இருந்து 1/2 கி.மீ துூரத்தில் உள்ள அடக்கஸ்தலத்தில் நாங்கள்அடக்கம் செய்துகொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த ஆஜர் எதிரி குமரேசன் மற்றும் சிலர் அங்கு வந்து ஆஜர் எதிரி குமரேசன் தன்னுடைய 5 சென்ட் இடம் சுடுகாட்டிற்கு பின்புறம் உள்ளதாகவும், அதனால் அதற்கு முன்புறம் உள்ள இடம்அனைத்தும் தனக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லி அந்த இடத்தில் அடக்கம் செய்யக்கூடாது என்று சொல்லி தேவிடியா மகனே என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசினார். உங்களை ஆளை வைத்து அடித்துவிடுவேன் என்றும், சாயத்தரத்திற்கு மேல் இருக்கமாட்டீர்கள் என்று சொல்லி கொலைமிரட்டல் செய்தார். பின்னர் இது சம்மந்தமாக அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u> – இல்லை

மறுவிசாரணை – இல்லை.

*Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.*

K KAVITHA

Digitally signed by K KAVITHA
Date: 2024.08.07 18:10:40 +0530

Chief Judicial Magistrate,
Theni.